**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**Ar.O.P. No.42/2022**

**நாள்.06.02.2025**

எ.ம.சா.1 திருமதி.கோமதி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மனு சொத்தை ஆர்ஜிதம் செய்த சமயத்தில் நான் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். ஆனால் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் சொல்லியுள்ளேன். ஆர்ஜிதம் செய்த இடத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் நான்குமால்கள் விவரம், நான் மாதிரி இடத்தில் உள்ள நான்குமால்களை வைத்து கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மாதிரி இடத்திற்கு நான்குமாலாக எந்த இடத்திலும் மெயின்ரோடு காட்டப்படவில்லை என்றால் சரிதான். சாட்சி ஆவணங்களை பார்த்து தெற்குபக்கம் பொதுப்பாதை காட்டப்பட்டுள்ளதாக சொல்கிறார். எ.ம.சா.ஆ.3 கிரைய பத்திரத்தில் அந்த தரப்பினர்கள் தங்களுக்குள் செய்துகொண்ட பொதுப்பாதையைத்தான் நான் குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 ல் வடக்கு நான்குமாலாக வாய்க்கால் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடமான சர்வே எண். 132/2A, 132/1B சொத்தினை ஒட்டி நயினார்கோவில் செல்லும் ரோடு உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. நான் தற்போது அந்த நிலத்தினை போய் பார்த்தேனா என்றால் இல்லை. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு சந்தை மதிப்பின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஒரு சொத்தின் அரசு வழிகாட்டுதல் மதிப்பிற்கும், சந்தை மதிப்பிற்கும் உள்ள வேறுபாடு தெரியும். பொதுவாக அரசு வழிகாட்டுதல் மதிப்பை விட 3 மடங்கு அதிகமாக சந்தை மதிப்பு

இருக்கும் என்றால் சரிதான்.

நில ஆர்ஜிதம் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் முன்பு நடந்த விசாரணையில் மனுதாரர்கள் தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன என்ற விவரத்தை நான் பார்த்தேனா என்றால் மாவட்ட ஆட்சியர் விசாரணையில் நான் பங்கு கொள்ளவில்லை என்பதால் பார்க்கவில்லை. சாட்சி சொல்ல வருவதற்கு முன்பாக அந்த ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மனுதாரர் சொத்திற்கு அருகில் உள்ள சொத்துக்கள் என்ன விலைக்கு கிரையம் செய்யப்பட்டுள்ளன என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 5 கிரைய பத்திரங்களை அவர் தாக்கல் செய்துள்ளார். அதில் உள்ள கிரைய தொகையை நான் தெரிந்து கொண்டேன். மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கிரைய பத்திரங்களின் கிரையத் தொகையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் இழப்பீடு நிர்ணயம் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரரின் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அருகில் நிறைய குடியிருப்புகள் இருந்தன என்றால் அப்போது இல்லை. நஞ்சை விவசாய நிலமாகத்தான் இருந்தது. மாவட்ட ஆட்சியர் சொல்லிக்கொடுத்ததை வைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது நீதிமன்றத்தில் மனுதாரர் என்னென்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். கிரைய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட கிரைய ஆவணங்களின் மதிப்புகளை நான் தெரிந்து கொண்டேன். மேற்படி கிரைய ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள கிரையத்தொகைகள் மாவட்ட சிறப்பு வருவாய் அலுவலரால் நிர்ணயம் செய்த இழப்பீட்டு தொகையைவிட அதிகமாக உள்ளன என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.2 புள்ளிவிவர பட்டியலின் அசல் எங்கள் அலுவலகத்தில் உள்ளது. அந்த ஆவணத்தின்படி, சர்வே எண். 220/2

நிலத்திற்கு சதுர மீட்டர் 1க்கு ரூ.865 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது 01.04.2012க்குப்பின்பு மேற்படி தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் இணை சார்பதிவாளர், இராமநாதபுரத்திலிருந்து வந்த ஆவணம் ஆகும். மேற்படி ஆவணத்தில் ஹெக்டேர் 1க்கு ரூ.1,47,000/– என அரசு வழிகாட்டுதல் மதிப்பின்படி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.3 ஆவணத்தின் அசல் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான். அசல் ஆவணம் இல்லாமல் நகலை உண்மை நகல் என்று சான்றிட்டு வழங்க முடியாது என்றால் சார்பதிவாளர் கொடுத்த நகலின் அடிப்படையில்தான் நாங்கள் உண்மை நகல் என்று சான்றிட்டு வழங்கினோம்.

சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் தற்போது அலுவலகத்தில் இருக்கிறார் என்றால் மருத்துவ விடுப்பில் உள்ளார். இராமநாதபுரம் டவுன் என்பது சூரங்கோட்டை, பட்டணம்காத்தான், சக்கரக்கோட்டை, R.S.மடை ஆகியவை சேர்ந்தது என்றால் எனக்குத் தெரியாது. இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் உள்ளது சக்கரக்கோட்டை எல்லையில் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. இராமநாதபுரம் டவுனில் எத்தனை வருவாய் கிராமங்கள் அடங்கியுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. அதே போன்று இராமநாதபுரம் நகராட்சியில் சூரங்கோட்டை எந்த எல்லைவரை உள்ளது என்று எனக்குத் தெரியாது. எத்தனை வார்டுகள் உள்ளன என்ற விவரமும் எனக்குத் தெரியாது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம், இராமநாதபுரம் டவுனிற்கு உட்பட்ட வருவாய் கிராமத்திற்கு உட்பட்டது என்றால் எனக்குத் தெரியாது. மாவட்ட ஆட்சியரின் விசாரணையில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்தின் புல வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதே போன்று மாதிரி இடத்தினை காண்பிக்கக்கூடிய கிரைய பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால்தான் மாவட்ட

ஆட்சியர் மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்ய முடியாமல் தவறான உத்தரவு போட்டுள்ளார் என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியர், மனுதாரர்களை விசாரித்து விசாரிக்கவில்லை என்றால் விசாரித்திருப்பார். சாட்சி தற்போது ஆவணங்களை பார்வையிட்டு மனுதாரரை விசாரித்துள்ளார் என்று கூறுகிறார். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அருகில் உள்ள நயினார்கோவில் செல்லும் ரோட்டில் டவுன்பஸ் மற்றும் ரூட்பஸ் போகின்றது என்றால் சரிதான். அந்த சாலையில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் சென்று வந்துகொண்டுள்ளன என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி நயினார்கோவில் ரோடானது எனக்கு விவரம் தெரிந்த நாட்களுக்கு முன்னதாகவே இருந்துவருகிறது என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி நயினார்கோவில் ரோடு குறைந்தது 50–60 வருடங்களாக உள்ளது என்றால் ஆவணங்களின்படி உள்ளது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அருகில் சர்வே எண். 218 ல் சூரங்கோட்டை கிராமம் உள்ளது என்றால் சரிதான். சூரங்கோட்டை கிராமத்தில் சுமார் 5000 நபர்கள் வசிக்கிறார்கள் என்றால் எனக்குத் தெரியாது. சூரங்கோட்டையில் பள்ளிக்கூடம் உள்ளது. சூரங்கோட்டைக்கு தெற்கே முதுநாள் கிராமம் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. நயினார்கோவில் ரோட்டை ஒட்டி, ஐயர்மடம் கிராமம் உள்ளது என்றால் ஒட்டியில்லை. தள்ளியுள்ளது. எவ்வளவு தூரம் தள்ளி உள்ளது என்றால் தூரம் சொல்ல முடியாது. அந்த கிராமத்தில் எத்தனை பேர் வசிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. நயினார்கோவில் ரோட்டினை ஒட்டி, சூரங்கோட்டை காலனி உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. சர்வே எண் இருந்தால்தான் சொல்ல முடியும். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அருகில் அய்யனார்கோவில், முருகன் கோவில், பிள்ளையார்கோவில் உள்ளன என்றால் எனக்குத் தெரியாது. ஐயர்மடத்தில் பள்ளிக்கூடம் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்திற்கு பக்கத்தில் நயினார்கோவில் ரோடு உள்ளது என்றும், அதில் மக்கள் அதிக அளவில் போய்க்கொண்டு

இருக்கிறார்கள் என்றால் எனக்குத் தெரியாது. எ.ம.சா.ஆ.1 புள்ளி விவரப்பட்டியலில் வரிசை எண்.251ல் மோகன்குமார் என்பவர் கவிதா என்பவருக்கு 2 செண்ட் நிலத்தை ரூ.2 லட்சத்திற்கு கிரையம் செய்துள்ளார் என்றால் அவ்வாறு உள்ளது. மேற்படி கவிதா என்பவர் கிரைய வாங்கிய அந்த நிலத்தையும் ஆர்ஜிதம் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி வரிசை எண்.251 ஆனது வீட்டு அடி நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நஞ்சை என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இடம் சதுர மீட்டர் கணக்கில் விற்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி எ.ம.சா.ஆ.1 புள்ளிவிவர பட்டியலில் உள்ள அனைத்துநிலங்களும் சதுர மீட்டர் அளவுகளில்தான் வீட்டுஅடி நிலமாக விற்கப்பட்டுள்ளது என்றால் சதுர மீட்டர் அளவுகளில் விற்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் அவை அனைத்தும் நஞ்சை நிலங்கள் என்றுதான் காட்டப்பட்டுள்ளன.

எ.ம.சா.ஆ.3 மாதிரி இடமானது எத்தனை செண்ட் எடுத்துள்ளோம் என்றால் 1250 சதுர அடி கணக்கு எடுத்துள்ளோம். செண்ட் கணக்கு போடவில்லை. மேற்படி எ.ம.சா.ஆ.3 பத்திரத்தில் நஞ்சை விஸ்தீரணம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 ல் உள்ள தரப்பினர்கள் பற்றி எனக்குத் தெரியாது. எ.ம.சா.ஆ.3 பத்திரத்தில் உண்மை நகல் என்று சான்றிடப்பட்டுள்ள அலுவலக முத்திரையில் அடித்தல் திருத்தம் உள்ளது என்றால் சரிதான். பழைய சீல் கொண்டுவரவில்லை என்பதால், புதிய சீல் வைத்து திருத்தம் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் குறியீடு செய்ய முடியாத ஆவணம் என்றும், அதனை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றால் சரியல்ல. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வீட்டுஅடி நிலம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது.

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு அருகில் உள்ள நிலங்கள் செண்ட் ஒன்று ஒரு லட்சத்திற்கும் அதிகமாக விற்கப்பட்டுள்ளது என்றும்,

ஆனால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு குறைவான மதிப்பு நிர்ணயம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஏற்கனவே ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு அருகில் உள்ள மற்ற நிலங்களை சாலை விரிவாக்கத்திற்காக ஆர்ஜிதம் செய்துள்ளோம் என்றால் நாங்கள் செய்யவில்லை. பொதுவாக ஒவ்வொரு வருடமும் நிலத்தின் மதிப்பு கூடிக்கொண்டே வருகிறது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அருகில் உள்ள நிலங்களின் மதிப்பும் வருடாவருடம் கூடிக்கொண்டே வருகிறது என்றால் கூடுமா, குறையுமா என்று எனக்குத் தெரியாது. அரசு வழிகாட்டுமதிப்பு ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கும் என்றால் எனக்குத் தெரியாது. எ.ம.சா.ஆ.2 ன்படி, 2012 ல் ஒரு சதுர மீட்டர் நிலத்தின் மதிப்பு ரூ.600 என்றும், பின்னர் அது 01.04.2012 ற்கு பின்பு ரூ.865 ஆக என்று அதிகரித்துள்ளது என்றால் சரிதான். அதனால் ஒவ்வொரு ஆண்டும் மதிப்பு அதிகரித்துக்கொண்டுள்ளது என்றும், நான் வழக்கிற்காக தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடங்கள் அனைத்தும் 2 சென்ட் அல்லது 3 சென்ட் அளவிலான நிலங்கள் என்றால் சரிதான். நான் மாவட்ட ஆட்சியர் சொல்லிக்கொடுத்தன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த உத்தரவு செல்லாது என்றால் சரியல்ல. சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலரும், மாவட்ட ஆட்சியரும் ஆர்ஜிதம் செய்த மனு சொத்திற்கு நிர்ணயம் செய்த இழப்பீட்டுத்தொகை குறைவானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/–ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .